**Tamil Nadu Public Service Commission**
**Syllabus**
**Social Work**
**(PG Degree Standard)**

**Code: 370**

## Unit I: Social Work Profession (20 Questions)

**Definition and meaning:** Historical evolution of Social Work – UK, USA and India; Growth of Social Work as a Profession; Social Work concepts, methods, fields; international and national professional bodies/ forums; status and problems of the profession in India.

**Social Work ideologies:** Socialism, marxism, equality, equity, social justice and humanitarianism; Indian socio-cultural and religious thought, social reforms purusharthas; Gandhian Social Work; contributions of religions- Hinduism, Buddhism, Jainism, Islam and Christianity; Rights based approach.

**Philosophy of Social Work Profession:** values, beliefs, principles and code of ethics; Social Work theories; International Social Work – basic concepts, Global Agenda and Global standards for practice; Human Rights and Social Work; Constitutional safeguards; India as a welfare state; role and contributions of voluntary organizations, INGOs, NGOs and CSOs.

## Unit II: Fundamentals of Sociology and Psychology (20 Questions)

**Sociology** Definition, meaning, scope and relevance to social work; basic sociological concepts: Society-meaning, definition and types, structure, features; social institutions; concept of social system and sub system, classification of social systems, culture: concept, characteristics, social stratification, social processes- social control, social change in India, social movements, crime and delinquency; social problems-poverty, inequality, casteism, causes and consequences.

**Psychology:** Definition, meaning and scope, Psychology and Social Work; lifespan, phases of human growth and development, (Erik Erikson and Freud) needs, tasks and challenges, influence of hereditary and environment; psychological processes for understanding behaviour, intelligence, sensation, emotions, learning, memory, attitudes, behaviour, perceptions and prejudices; life events and their impact on behaviour.

## Unit III: Direct Methods of Social Work Practice–I (10 Questions)

**Social Case Work:** Historical development, CW as a direct method of Social Work, definition and meaning, philosophy, values, principles, skills, components of social case work, case work relationship; empathy, skills in building relationship, transference and counter transference; difference between casework, counseling and psychotherapy for different target groups, the helping process, approaches: Skills-referrals, interview, observation, collateral contact; types of recording, application of CW in various settings; limitations of the method.

**Social Group Work:** Definition of group, types, and characteristics of groups; Historical development of GW as a direct method in Social Work, definition and meaning, purpose, objectives, values, skills, principles of GW, phases of group work process-group processes and dynamics-stages in group development, the influence of new comers on group processes, isolation, rejection in groups, group-bond, subgroups, clique, dyad, triad, group norms, group membership, group cohesiveness, group pressure, group morale, leadership, team building, decision making, problem solving, conflict management, communication; role clarity in a group; use of sociometry; Group Work models; social goals model, remedial model, reciprocal model, Application in various settings; types of recording in Group Work.

**Unit IV: Direct Methods of Social Work Practice–II (10 Questions)**

**Community Organisation:** Definition, philosophy, principles, goals, scope of CO; community as a social system; sub systems; types and characteristics community power structure, community dynamics, evolution of CO as a direct method in social work, community organization models: Rothman- social planning, locality development and social action; Murray Ross-general content, specific content and process objective; process and skills in community organisation.

**Social Action:** Concept, definition, aims and objectives, scope, social action as a method in social work, paradigm of five elements: causes, change agent, change target, change channels, change strategy, strategies and tactics for social action: channels topology; skills of a social activist, models and approaches to social action: Paulo Freire- Martin Luther King ,Saul Alinsky, social action movements in India- Narmada Bachao Andolan, Chipko movement, Dalit movements, women's movements, Contemporary Social Reforms movement.

**Unit V: Indirect Methods of Social Work Practice-I (15 Questions)**

**Social Work Research:** Definition, objectives, scope, characteristics and functions– scientific method, concepts, variables, types of research, research as an indirect method of social work, qualitative methods – case study, Ethnography, Grounded, Theory, Content Analysis, Narrative, SWOC; quantitative research Methods-Tools and techniques inqualitative data collection: Observation, focus group discussion, unstructured in-depth Interview; iteration, triangulation and saturation. Mixed Methods: problem formulation: formulation of hypotheses; typology of research designs; ethical issues; sampling: definition, types, techniques: probability and non- probability sampling; sampling errors; data sources; types of data-nominal, ordinal, discrete numeric, continuous, sources of data; methods, tools and techniques of data collection, classification and coding, tabulation, analysis and interpretation–research reporting.

**Statistics:** Meaning, definition, limitations and uses- frequency distribution- construction of frequency tables–diagrammatic and graphical representation; measures of central tendency – mean, median, mode, measures of dispersion- standard deviation, variance, quartile range, measures of correlation and regression; tests of significance: hypothesis testing; Type I & Type II errors, Level of confidence, degrees of freedom Chi square, 't' test, reliability and validity methods; Scales: Rating scales, Attitude scales–Likert, Thurstone, Guttman; using software for data analysis.

**Unit VI: Indirect Methods of Social Work Practice-II (20 Questions)**

**Social Work Administration**: Concept, definition, characteristics, Social work Administration as an indirect method of Social work; Organizational structure, boards and committees: executive: functions and qualities - administrative process: policy formation, planning, decision making, co- ordination, communication; Human Resource Management: selection of staff, orientation, placement, service conditions, promotions, discipline, welfare programmes for staff -financial administration: budgeting, accounting, bookkeeping and fund-raising-office administration: office management and maintenance of records- supervision, evaluation and public relations; Central Social Welfare Board, State Social Welfare Board, Nehru Yuvak Kendra, Ministry of Social Defence Department of Social Welfare; Role of Voluntary Agencies, Board, Trustee, Committees, Executives –Roles and Functions; Laws related to NGOs; Registration of organizations: Tamil Nadu Societies Registration Act 1975, Trust Act 2001, Foreign Contribution (Regulation) Act 1976, Tax Exemptions and Foreign grants; Role and contribution of international funding organizations; Project and Project Cycle Management; Project Proposal Writing, Overview of Logical Framework Analysis; Types and Steps, Format; Fund-Raising (Types, Methods, Skills); Monitoring and Evaluation of Projects.

**Unit VII: Specialization in Health Care and Social Work (15 Questions)**

**Health:** Definition and concept; Healthcare approaches: patient as a person, psychosomatic approach, holistic approach. Problem assessment process: Rehabilitation, definition, types and principles, levels-prevention, promotion and tertiary; rehabilitation therapies; gender dimensions in disability, rehabilitation in various settings – UN convention on the rights of persons with disabilities; policies and programmes; Community –Based Rehabilitation.

**Community health:** Definition, health indicators, disease, sickness/illness, definition of public health, changing concepts, primary healthcare: preventive, curative and social medicine. wellbeing, HDI; Communicable and non-communicable diseases: causes, prevention and treatment, Primary Health Care; Health Education; Skills of Social Worker in healthcare.

**Concept of mental health:** Magnitude of mental health problems, changing trends in mental healthcare; psychiatric assessment: common mental disorders (as per ICD 10); mental health and Well Being; definition, history and scope of psychiatric social work, changing perspectives of psychiatric social work, application of methods in psychiatric settings-theory and models; psychoanalytical, psycho social, transactional analysis, family therapy, crisis intervention, behaviour therapy, rational emotive therapy, group therapy & strengths based approach; counselling: definition, principles, goals, approaches and techniques- CBR and Community Mental Health, Mental Health Act 2018.

**Unit VIII: Specialization in Rural and Urban Community Development (35 Questions)**

**Rural Community development:** Definition, philosophy, objectives, scope; history of RCD; Rural development: need and importance, approaches, power structure, caste and untouchability, poverty and indebtedness; land reform measures, Farm laws, agricultural laborers, marginal and small farmers; water shed management;

**Development Administration:** Organization and administration of rural, tribal and urban development from block to National levels. Panchayat systems and local self-government in India; rural development programmes and policies; implementation strategies, PMERG, SUMCY, PMKVY tribal communities: Adivasis, Indigenous, aborigines; tribal social systems and structures; types, characteristics, tribal social systems and structures; belief systems, culture-indigenous vs. mainstream, Atrocities against SC/ST and Constitutional Provisions for the safeguard of SC/ST.

**Urban Community development:** Definition, philosophy and objectives, history of UCD, scope; Slums: definition, causes, characteristics, functions, classification, approaches, theories and culture of slums; in and out migration, urbanization, urbanism: theories of urbanization, Unorganized/Informal sectors; urban services and urban deficiencies; 74th amendment and salient features of Nagarpalika Act; structure and functions of Urban Development Agencies: Urban Development Programmes: role of community development worker; rural, tribal and urban policies; tools and techniques for development practice; Application of social work methods in rural, tribal and urban communities, Role of CSR in Community Development.

**Disaster:** Definition, types, problems, Disaster Management and its process.

**Unit IX: Specialization in Family and Child Social Work (35 Questions)**

**Family:** Definition, concept, characteristics, types, functions, family patterns; marriage: forms, functions, changing situations in marriage, challenges, separation and divorce; assessment of family needs; laws on family and marriage; **Gerontology and Geriatric Care:** Definition, Theories of Aging, Dimensions of Aging, disabilities; Interventions with older persons; Policies and programmes for senior citizens -NPOP and Maintenance and Welfare of Parents and Senior Citizens Act 2007, stress management of caregivers, Role of government and non-governmental services, institutional and non-institutional; hospice & palliative care.

**Youth:** Definition, demographic profile; Youth Policy–2014; needs of youth; impact of westernization, modernization, urbanization and globalization; problems of youth; programmes for rural/urban youth, career counselling, Organisations and Movements in India.

**Women:** Sex and gender, gender identity; gender stratification; sex ratio in India; feminism: concept, meaning and definition and types; empowerment: concept, definition, types; GDI, GEM; Constitutional provisions and protective laws for women; special initiatives and programmes for women, national and state commissions; Convention on elimination of all forms of discrimination against women and girls (CEDAW) 1982, micro finance and self-help groups (SHGs), challenges of Indian women Status of Women in India, Problems of Women, Cyber Security.

**Children:** Demography; Constitutional safeguards; UNCRC, Post 2015 Development Agenda; Common Problems of Children-School Dropouts, Truancy, street children, child labour, child abuse, child trafficking, child prostitution, Child marriage, Teenage Pregnancy, Children and Gaming Addiction, Social Media and related problems, disabled children, the girl child; Child services: mechanisms, National commission for protection of child rights/ State commission for protection of child rights, District Child protection Unit; Legislations for Protection of Children-POCSO, JJ Act, Information Technology Act-2000; Approaches: Adoption – sponsorship and foster care, Institutional Care; application of Social work methods in Family and Child setting.

**Unit X: Specialization in Industrial Relations, Labour Welfare and Social Work (20 Questions)**

**Industrial Relations:** Concept, characteristics, Industrial Relations at plant and shop floor level, Industrial conflicts: concepts of industrial peace; cause and consequence of industrial conflict, strikes and lock-outs; conflict resolution, meditation**,** conciliation: arbitration and adjudication; statutory and non-statutory machinery for prevention and settlement of disputes. Trade Unions: Trade unionism in India, role in Industrial relations.

**Labour Welfare:** Concept, definition, philosophies, need, objectives, principles, scope and limitations of labour welfare; Historical development of labour welfare in India. Statutory and Non-Statutory Welfare Provisions: Industrial Counseling- Pre-retirement, Quality of work life. Social security, social security measures; Standardization, Wage policy, Wage incentives, bonus and profit sharing. Collective Bargaining: Meaning, goal, phases, pre- requisites, principles, strategies and negotiation skills, factors influencing collective bargaining, Role of Social worker in industrial setting.
**HR System Concept and functions:** HRM, HRD & HR; evolution, Asian trends; HRD system and sub-systems; elements, goals, importance of HRD in Industry; 360 Degree feedback; leadership and leadership development; mentors & modeling; Organizational commitment CSR in HR.

Dated: 25.04.2022

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**பாடத்திட்டம்**

**சமூகப் பணி**

**(முதுநிலை பட்டப்படிப்பு தரம்)**

**குறியீடு: 370**

**அலகு I: தொழில்முறை சமூகப்பணி (20 வினாக்கள்)**

**வரையறை மற்றும் பொருள்**: சமூகப் பணியின் வரலாற்றுப் பரிணாமம் - இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்தியா: ஒரு தொழிலாக சமூகப் பணியின் வளர்ச்சி; சமூகப் பணி கருத்துக்கள், முறைகள், துறைகள்; சர்வதேச மற்றும் தேசிய தொழில்முறை அமைப்புகள்/ மன்றங்கள்; இந்தியாவில் சமூகப் பணி தொழிலின் நிலை மற்றும் பிரச்சனைகள்.

**சமூகப் பணி சித்தாந்தங்கள்**: சோசலிசம், மார்க்சியம், சமத்துவம் (Equality), சமூக சமத்துவம் (Equity), சமூக நீதி மற்றும் மனிதாபிமானம்: இந்திய சமூக-கலாச்சார மற்றும் மத சிந்தனைகள், சமூக சீர்திருத்தங்கள் புருஷார்த்தங்கள்; காந்திய சமூகப் பணி; மதங்களின் பங்களிப்புகள்- இந்து மதம், பௌத்தம், சமணம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம்; உரிமைகள் சார்ந்த அணுகுமுறை.

**தொழில்முறை சமூகப் பணி தத்துவம்**: மதிப்பீடுகள், நம்பிக்கைகள், கொள்கைகள் மற்றும் நெறிமுறைகள்; சமூகப் பணி கோட்பாடுகள்; சர்வதேச சமூகப் பணி - அடிப்படை கருத்துக்கள், சமூகப் பணி தொழில்சார் நடைமுறைக்கான உலகளாவிய நிகழ்ச்சி நிரல் மற்றும் உலகளாவிய தரநிலைகள்; மனித உரிமைகள் மற்றும் தொழில்முறை சமூகப் பணி; அரசியலமைப்பு பாதுகாப்புகள்; இந்தியா ஒரு நலன்புரி நாடாக; தன்னார்வ நிறுவனங்கள், சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் அரசு சாரா இந்திய நிறுவனங்கள் மற்றும் குடிமை சமூக நிறுவனங்களின் பங்களிப்புகள்.

**அலகு II: சமூகவியல் மற்றும் உளவியல் அடிப்படைகள் (20 வினாக்கள்)**

**சமூகவியல்**- வரையறை, பொருள், வரையெல்லை மற்றும் சமூகப் பணிக்கான தொடர்பு; அடிப்படை சமூகவியல் கருத்துக்கள்: சமூகம்- பொருள், வரையறை மற்றும் வகைகள், கட்டமைப்பு, அம்சங்கள்; சமூக நிறுவனங்கள்; சமூக அமைப்பு மற்றும் துணை அமைப்பு - கருத்துக்கள், சமூக அமைப்புகளின் வகைப்பாடு, கலாச்சாரம்: கருத்து, பண்புகள், சமூக அடுக்கு, சமூக செயல்முறைகள்- சமூக கட்டுப்பாடு, இந்தியாவில் சமூக மாற்றம், சமூக இயக்கங்கள், குற்றம் மற்றும் குற்றச் செயல்கள், சமூகப் பிரச்சனைகள் - வறுமை, சமத்துவமின்மை, சாதிவெறி, காரணங்கள் மற்றும் விளைவுகள்.

**உளவியல்**: வரையறை, பொருள் மற்றும் வரையெல்லை, உளவியல் மற்றும் சமூகப் பணி; ஆயுட்காலம், மனித வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின் கட்டங்கள், (எரிக் எரிக்சன் மற்றும் பிராய்ட்) தேவைகள், பணிகள் மற்றும் சவால்கள், பரம்பரை மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம்; நடத்தையை புரிந்து கொள்வதற்கான உளவியல் செயல்முறைகள், நுண்ணறிவு, உணர்வு, உணர்ச்சிகள், கற்றல், நினைவு, மனப்பாங்கு, நடத்தை, கண்ணோட்டம், மற்றும் பாரபட்சம்: வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் நடத்தை மீதான அவற்றின் தாக்கம்.

**அலகு III: சமூகப் பணி நடைமுறையின் நேரடி முறைகள்–I (10 வினாக்கள்)**

**சமூக தனிநபர் பணி**: வரலாறும் வளர்ச்சியும், சமூகப் பணியின் நேரடி முறையாக தனிநபர் பணி, வரையறை மற்றும் பொருள், தத்துவம், மதிப்பீடுகள், கொள்கைகள், திறன்கள், சமூக தனிநபர் பணியின் கூறுகள், தனிநபர் பணி உறவு; பச்சாதாபம், உறவை கட்டியெழுப்பும் திறன்கள், மன உணர்வு இடமாற்றம் மற்றும் எதிர்மன

உணர்வு இடமாற்றம்: வெவ்வேறு இலக்கு குழுக்களுக்கான சமூக தனிநபர் பணி, ஆலோசனை மற்றும் உளவியல் சிகிச்சை இடையே உள்ள வேறுபாடுகள், தனிநபர் பணியின் செயல்முறை, அணுகுமுறைகள்: திறன்கள்- பரிந்துரைகள், நேர்காணல், கூர்நோக்குதல், இணை தொடர்பு; தனிநபர் பணியின் பதிவு வகைகள், பல்வேறு அமைப்புகளில் தனிநபர் பணியின் பயன்பாடு மற்றும் தனிநபர் பணி முறையின் வரம்புகள்.

**சமூக குழுப் பணி**: குழுவின் வரையறை, வகைகள் மற்றும் குழுக்களின் பண்புகள்; வரலாறும் வளர்ச்சியும், சமூகப் பணியின் நேரடி முறையாக சமூக குழுப் பணி, வரையறை மற்றும் பொருள், நோக்கம், குறிக்கோள்கள், மதிப்பீடுகள், திறன்கள், சமூக குழுப் பணியின் கொள்கைகள், குழுப் பணி செயல்முறையின் கட்டங்கள், குழு செயல்முறைகள் மற்றும் இயக்கவியல்-குழு வளர்ச்சி நிலைகள், குழு செயல்முறைகளில் புதியவர்களின் செல்வாக்கு, தனிமைப்படுத்தல், குழுக்களின் நிராகரிப்பு, குழு பிணைப்பு, உட்குழுக்கள், தன்னல உட்குழு, இணை மற்றும் முக்கோண உட்குழுக்கள், குழு விதிமுறைகள், குழு உறுப்பினர், குழு ஒருங்கிணைப்பு, குழு அழுத்தம், குழு மனவுறுதி, தலைமை, அணி உருவாக்கம், முடிவெடுத்தல், சிக்கலைத் தீர்த்தல், மோதல் மேலாண்மை, தகவல் பரிமாற்றம்: குழு உறுப்பினர்களின் பங்கும் பொறுப்பும் பற்றிய தெளிவு; சமூகஅளவியல் பயன்பாடு: சமூக குழுப் பணி மாதிரிகள்: சமூக இலக்குகள் மாதிரி, சீராக்க மாதிரி, பரஸ்பர மாதிரி, பல்வேறு அமைப்புகளில் குழுப் பணியின் பயன்பாடு மற்றும் பதிவு செய்யும் வகைகள்.

**அலகு IV: சமூகப் பணி நடைமுறையின் நேரடி முறைகள்–II (10 வினாக்கள்)**

**சமூக ஒருங்கிணைப்பு பணி**: வரையறை, தத்துவம், கொள்கைகள், இலக்குகள், சமூக ஒருங்கமைப்பு பணியின் வரையெல்லை; சமூகம் ஒரு சமுதாய அமைப்பாக; துணை அமைப்புகள்: சமூக வகைகள் மற்றும் அவற்றின் பண்புகள், சமூக அதிகார அமைப்பு, சமூக இயக்கவியல், சமூகப் பணியின் நேரடி முறையாக, வரலாறும் வளர்ச்சியும் சமூக ஒருங்கமைப்பு பணியின் மாதிரிகள்: ரோத்மன் - சமூக திட்டமிடல், வட்டார வளர்ச்சி மற்றும் சமூக நடவடிக்கை மாதிரிகள்: முர்ரே ராஸ்-பொது, குறிப்பிட்ட மற்றும் செயல்முறை மாதிரிகள் சமூக ஒருங்கமைப்புப் பணியின் குறிக்கோள்கள்,செயல்முறைகள் மற்றும் திறன்கள்

**சமூக நடவடிக்கை**: கருத்து, வரையறை, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள், வரையெல்லை, சமூக நடவடிக்கை, ஐந்து கூறுகளின் முன்னுதாரணம்: மாற்றத்திற்கான காரணங்கள், மாற்றத்திற்கான முகவர், மாற்றத்திற்கான இலக்கு, மாற்றத்திற்கான வழிகள், மாற்றத்திற்கான உத்திகள், சமூக நடவடிக்கைக்கான உத்திகள் மற்றும் தந்திர பயன்கள்: மாற்றத்திற்கான வழிகளின் வகைப்பாடு, ஒரு சமூக ஆர்வலரின் திறன்கள், சமூக நடவடிக்கை மாதிரிகள் மற்றும் அணுகுமுறைகள்: பாலோ ஃப்ரீயர்- மார்ட்டின் லூதர் கிங், சால் அலின்ஸ்கி, இந்தியாவில் சமூக நடவடிக்கை இயக்கங்கள்- நர்மதா பச்சாவோ ஆந்தோலன், சிப்கோ இயக்கம், தலித் இயக்கங்கள், பெண்கள் இயக்கங்கள், சமகால சமூக சீர்திருத்த இயக்கங்கள்

**அலகு V: சமூகப் பணி நடைமுறையின் மறைமுக முறைகள்-I (15 வினாக்கள்)**

**சமூக பணி ஆராய்ச்சி**: வரையறை, குறிக்கோள்கள் வரையெல்லை, பண்புகள் மற்றும் செயல்பாடுகள்- அறிவியல் முறை, கருத்துகள், மாறிகள், ஆராய்ச்சி வகைகள், சமூகப் பணியின் மறைமுக முறையாக ஆராய்ச்சி, பண்பரி ஆய்வு முறைகள் - த்தநினவம்பரின் சமூக அனுபவங்களின் ஆய்வு, இனவரைவியல், அடிப்படை கோட்பாடு, உள்ளடக்க பகுப்பாய்வுத்தொடர் நிகழ்வுகளின் விளக்கம், வலிமைகள், குறைகள் வாய்ப்புகள் மற்றும் தடைகள் பகுப்பாய்வு (SWOC); அளவரி ஆய்வு முறைகள்- கருவிகள் மற்றும் நுட்பங்கள் - அளவரி ஆய்வு தரவு சேகரிப்பு: கூர்னோக்குதல், குவினோக்கு குழு கலந்துரையாடல், கட்டமைக்கப்படாத ஆழமான நேர்காணல்: மறுசெய்கை, முக்கோணம் மற்றும் செறிவு. கலப்பு முறைகள்: ஆய்வு பொருள் உருவாக்கம்: கருதுகோள்களை உருவாக்குதல்; ஆராய்ச்சி வடிவமைப்புகளின் வகைப்பாடு: நெறிமுறை சிக்கல்கள்; மாதிரி:

வரையறை, வகைகள், நுட்பங்கள்: நிகழ்தகவு மற்றும் நிகழ்தகவு அல்லாத மாதிரி: மாதிரி பிழைகள்: தரவு ஆதாரங்கள்: தரவு வகைகள் - பெயரளவு, சாதாரண தரவு, தனித்த தரவு, தொடர்ச்சியான தரவு, தரவு ஆதாரங்கள்: தரவு சேகரிப்பு முறைகள், கருவிகள் மற்றும் நுட்பங்கள், வகைப்பாடு மற்றும் குறியீட்டு முறை, அட்டவணை, பகுப்பாய்வு மற்றும் விளக்கம்-ஆராய்ச்சி அறிக்கை.

**புள்ளிவிவரங்கள்**: பொருள், வரையறை, வரம்புகள் மற்றும் பயன்பாடுகள்- அதிர்வெண் பரவல் - அதிர்வெண் அட்டவணைகள் உருவாக்கம்- வரைபடம் மற்றும் வரைகலை பிரதிநிதித்துவம்: மையப் போக்கின் அளவீடுள், எண்கணித சராசரி, இடைநிலை சராசரி பயன்முறை சராசரி - சிதறல் அளவீடுகள் - நிலையான விலகல், மாறுபாடு, காலாண்டு வரம்பு, புள்ளியியல் தொடர்பு மற்றும் பின்னடைவு அளவீடுகள், பொருண்மைச் சோதனைகள்: கருதுகோள் சோதனை: வகை I மற்றும் வகை II பிழைகள், நம்பிக்கை நிலை, சுதந்திர அளவுகள் chi-Square சோதனை, , டி-சோதனை, நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடியாகும் தன்மையின் முறைகள்: அளவுகோல்கள்: தர அளவுகோல், மனப்பாங்கு அளவுகோல்கள்-லிக்கர்ட், தர்ஸ்டோன், குட்மேன்: தரவு பகுப்பாய்வுக்கு மென்பொருள் பயன்படுத்தல்

**அலகு VI: தொழில்சார் சமூகப் பணியின் மறைமுக முறைகள்-II (20 வினாக்கள்)**

**சமூகப் பணி நிர்வாகம்**: கருத்து, வரையறை, பண்புகள், சமூகப் பணி நிர்வாகம் சமூகப் பணியின் மறைமுக முறையாக: நிறுவன அமைப்பு, வாரியங்கள் மற்றும் குழுக்கள்: நிர்வாக செயல்பாடுகள் மற்றும் குணங்கள் - நிர்வாக செயல்முறை: கொள்கை உருவாக்கம், திட்டமிடல், முடிவு எடுத்தல், ஒருங்கிணைப்பு, தகவல் பரிமாற்றம்: மனித வள மேலாண்மை: பணியாளர்கள் தேர்வு, நோக்கு நிலை, பணியமர்வு பணி நிபந்தனைகள், பதவி உயர்வுகள், ஒழுக்கம், பணியாளர்களுக்கான நலத்திட்டங்கள்- நிதி நிர்வாகம்: வரவு செலவு திட்டம், கணக்கியல், கணக்கேடுகள் பராமரிப்பு மற்றும் நிதி திரட்டுதல், அலுவலக நிர்வாகம்: அலுவலக மேலாண்மை மற்றும் பதிவுகளை பராமரித்தல் - மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் மக்கள் தொடர்பு: மத்திய சமூக நல வாரியம், மாநில சமூக நல வாரியம், நேரு இளைஞர் மையங்கள், சமூக பாதுகாப்பு அமைச்சகம், சமூக நலத்துறை: தன்னார்வ நிறுவனங்களின் பங்கு, வாரியம், அறங்காவலர், குழுக்கள், நிர்வாகிகள் பங்கு மற்றும் செயல்பாடுகள்: அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பான சட்டங்கள்: நிறுவனங்களின் பதிவு: தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975, அறக்கட்டளைச் சட்டம் 2001, வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 1976, வரி விலக்குகள் மற்றும் வெளிநாட்டு மானியங்கள்: சர்வதேச நிதி நிறுவனங்கள் பாத்திரங்கள் மற்றும் பங்களிப்பு: திட்டம் மற்றும் திட்ட சுழற்சி மேலாண்மை: திட்ட முன்மொழிவு எழுதுதல், தருக்க கட்டமைப்பு பகுப்பாய்வின் ஒரு மேலோட்டம்: வகைகள் மற்றும் படிகள், வடிவம்: நிதி திரட்டுதல் - வகைகள், முறைகள், திறன்கள்: திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

**அலகு VII: உடல் நலம் மற்றும் சமூகப் பணியில் நிபுணத்துவம் (15 வினாக்கள்)**

**ஆரோக்கியம்**: வரையறை மற்றும் கருத்து: சுகாதார அணுகுமுறைகள்: நோயாளி ஒரு நபராக, உள்ளம் - உடல் சார் அணுகுமுறை, முழுமையான அணுகுமுறை. நோயாளியின் பிரச்சனையை மதிப்பீடு செய்யும் செயல்முறை: மறுவாழ்வு, வரையறை, வகைகள் மற்றும் கொள்கைகள், நிலைகள் - தடுப்பு, மேம்படுத்துதல் மற்றும் மூன்றாம் நிலை: மறுவாழ்வு சிகிச்சைகள்: குறைபாடுகளின் பாலின பரிமாணங்கள், பல்வேறு அமைப்புகளில் மறுவாழ்வு - குறைபாடுகள் உள்ள நபர்களின் உரிமைகளுக்கான ஐநா மாநாடு: கொள்கைகள் மற்றும் திட்டங்கள்: சமூக அடிப்படையிலான மறுவாழ்வு.

**சமூக ஆரோக்கியம்**: வரையறை, சுகாதார குறியீடு, நோய், உடல்நலம் குன்றிய/ உடல் நலமின்மை, உடல் நலம் பற்றிய பொது வரையறை, மாறிவரும் கருத்துகள், முதன்மை சுகாதார பராமரிப்பு: தடுப்பு, நோய் தீர்க்கும் மற்றும்

சமூக மருத்துவம். நல்வாழ்வு, மனித வளர்ச்சி குறியீடு (HDI); தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்கள்: காரணங்கள், தடுப்பு மற்றும் சிகிச்சை, ஆரம்ப சுகாதார பராமரிப்பு; சுகாதார கல்வி; சுகாதார பராமரிப்பில் சமூகப் பணியாளர்களின் திறன்கள்.

**மனநலம் பற்றிய கருத்து**: மனநல பிரச்சனைகளின் வீரியம், மாறி வரும் மனநல சுகாதார பராமரிப்பு போக்குகள்; மனநல மதிப்பீடு: பொதுவான மனநல கோளாறுகள் (ICD 10 இன் படி); மனநலம் மற்றும் நல்வாழ்வு; மனநல சமூகப் பணியின் வரையறை, வரலாறு மற்றும் நோக்கம், மனநல சமூகப் பணி பற்றி மாறி வரும் கண்ணோட்டம், மனநல அமைப்புகளில் சமூகப் பணி முறைகளின் பயன்பாடு-கோட்பாடு மற்றும் மாதிரிகள்: மனோ பகுப்பாய்வு, உளவியல் சமூக பகுப்பாய்வு, பரிவர்த்தனை பகுப்பாய்வு, குடும்ப சிகிச்சை, நெருக்கடி சூழ்நிலைகளில் கவனிப்பு நடத்தை சிகிச்சை, பகுத்தறிவு உணர்ச்சி சிகிச்சை, குழு சிகிச்சை மற்றும் வலிமை அடிப்படையில் அணுகுமுறை; ஆலோசனை: வரையறை, கொள்கைகள், இலக்குகள், அணுகுமுறைகள் மற்றும் நுட்பங்கள்-சமூக அடிப்படையிலான மறுவாழ்வு, மற்றும் சமூக மனநலம், மனநலச் சட்டம் 2018.

**அலகு VIII: கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூக மேம்பாட்டில் நிபுணத்துவம் (35 வினாக்கள்)**

**கிராமப்புற சமூக வளர்ச்சி**: வரையறை, தத்துவம், குறிக்கோள்கள், வரையெல்லை; கிராமப்புற சமூக வளர்ச்சியின் வரலாறு; கிராமப்புற வளர்ச்சி: தேவை மற்றும் முக்கியத்துவம், அணுகுமுறைகள், அதிகார அமைப்பு, சாதி மற்றும் தீண்டாமை, வறுமை மற்றும் கடன்; நில சீர்திருத்த நடவடிக்கைகள், பண்ணை சட்டங்கள், விவசாய தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள்; நீர்வரத்து மேலாண்மை;

**மேம்பாட்டு நிர்வாகம்**: வட்டாரத்திலிருந்து தேசிய அளவிலான கிராமப்புற, பழங்குடி மற்றும் நகர்ப்புற ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகம். இந்தியாவின் பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் உள்ளூர் சுய-அரசு; கிராமப்புற வளர்ச்சி திட்டங்கள் மற்றும் கொள்கைகள்; செயல்படுத்தும் உத்திகள், பிரதம மந்திரியின் வேலை உருவாக்க திட்டம் (PMERG), மகளிர் திறம் மேம்படுத்துதலுக்கான தரி திட்டம் (ஸ்), பிரதம மந்திரியின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) பழங்குடி சமூகங்கள்: ஆதிவாசிகள், பழங்குடியினர், பூர்வீகக் குடிகள், பழங்குடி சமூக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகள்; வகைகள், பண்புகள், பழங்குடி சமூக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகள்; நம்பிக்கை அமைப்புகள், கலாச்சாரம் - பூர்வீகத்திற்கு எதிரான பிரதான சமூக கலாச்சாரம், பட்டியலினத்தவர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் அரசியலமைப்பு பாதுகாப்பு விதிகள்.

**நகர்ப்புற சமூக வளர்ச்சி**: வரையறை, தத்துவம் மற்றும் குறிக்கோள்கள், நகர்ப்புற சமூக வளர்ச்சியின் வரலாறு, வரையெல்லை குடிசைவாழ் பகுதி: வரையறை, காரணங்கள், பண்புகள், செயல்பாடுகள், வகைப்பாடு, அணுகுமுறைகள், கோட்பாடுகள் மற்றும் குடிசைவாழ் கலாச்சாரம்; உள் மற்றும் வெளி இடப்பெயர்வு, நகரமயமாக்கல், நகரமயமாதல்: நகரமயமாக்கலின் கோட்பாடுகள், அமைப்புசாரா/முறைசாரா துறைகள்; நகர்ப்புற சேவைகள் மற்றும் நகர்ப்புற குறைபாடுகள்; 74 வது திருத்தம் மற்றும் நகர்பாலிகா சட்டத்தின் முக்கிய அம்சங்கள்; நகர்ப்புற மேம்பாட்டு முகமைகளின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள்; நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள்; சமூக மேம்பாட்டுப் பணியாளர் பங்கு; கிராமப்புற, பழங்குடி மற்றும் நகர்ப்புற கொள்கைகள்; மேம்பாட்டு நடைமுறைக்கான கருவிகள் மற்றும் நுட்பங்கள்; கிராமப்புற, பழங்குடி மற்றும் நகர்ப்புற சமூகங்களில் சமூகப் பணி முறைகளின் பயன்பாடு சமூக வளர்ச்சியில் பெருநிறுவன சமூக பொறுப்பின் பங்கு.

**பேரிடர்**: வரையறை, வகைகள், சிக்கல்கள், பேரிடர் மேலாண்மை மற்றும் அதன் செயல்முறை.

**அலகு IX: குடும்பம் மற்றும் குழந்தை சமூகப் பணியில் நிபுணத்துவம் (35 வினாக்கள்)**

**குடும்பம்**: வரையறை, கருத்து, பண்புகள், வகைகள், செயல்பாடுகள், குடும்ப முறைகள்; திருமணம்: வடிவங்கள், செயல்பாடுகள், மாறிவரும் திருமண சூழ்நிலைகள், சவால்கள், பிரிவினை மற்றும் விவாகரத்து, குடும்ப தேவைகளை மதிப்பீடு செய்தல்; குடும்பம் மற்றும் திருமண சட்டங்கள்; முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு: வரையறை, முதுமை கோட்பாடுகள், முதுமையின் பரிமாணங்கள், குறைபாடுகள்; முதுமையானவர்களுக்கான சமூகப் பணி கவனிப்பு, கொள்கைகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான திட்டங்கள் - முதியவர்களுக்கு தேசிய கொள்கை, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007, பராமரிப்பாளர்களின் மன அழுத்த மேலாண்மை, அரசு சார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் சேவைகள்; இறப்பு நிலை உதவி மருத்துவமனை மற்றும் இறப்பு நிலை வலி தணிப்பு சிகிச்சை.

**இளைஞர்கள்**: வரையறை, இளைஞர்கள் பற்றிய புள்ளிவிவரக் குறிப்புகள்; இளைஞர் கொள்கை–2014; இளைஞர்களின் தேவைகள்; மேற்கத்தியமயமாக்கல், நவீனமயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மற்றும் இளைஞர்கள் மீதான இவற்றின் தாக்கம், இளைஞர்களின் பிரச்சினைகள்; இந்தியாவில் உள்ள கிராமப்புற/நகர்ப்புற இளைஞார்களுக்கான திட்டங்கள், தொழில் ஆலோசனை, இந்தியாவில் இளைஞர்களுக்கான நிறுவனங்கள் மற்றும் இயக்கங்கள்.

**பெண்கள்**: பால் மற்றும் பாலினம், பாலின அடையாளம்; பாலின அடுக்குமுறை; இந்தியாவில் பாலின விகிதம்; பெண்ணியம்: கருத்து, பொருள், வரையறை மற்றும் வகைகள்; அதிகாரமளித்தல்: கருத்து, வரையறை, வகைகள்; பாலின வளர்ச்சி குறியீடு, பாலின அதிகாரமளிப்பு அளவீடு; பெண்களுக்கான அரசியலமைப்பு விதிகள் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள்; பெண்களுக்கான சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் தேசிய மற்றும் மாநில ஆணையங்கள்; பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகை பாகுபாடு நீக்குவதற்கான மாநாடு (CEDAW) 1982, சிறு நிதி மற்றும் சுய உதவி குழுக்கள் (SHGs), இந்தியப் பெண்களின் சவால்கள், இந்தியாவில் பெண்களின் நிலை, பெண்களின் பிரச்சனைகள், பெண்களுக்கான இணைய பாதுகாப்பு.

**குழந்தைகள்**: குழந்தைகள் பற்றிய புள்ளி விவரம் குறிப்புகள்; அரசியலமைப்பு பாதுகாப்புகள்; குழந்தைகள் உரிமைகளுக்கான ஐ.நா மாநாடு, 2015க்கு பிந்தைய காலகட்டத்தில் குழந்தைகள் நிலை, உலகளாவிய நிகழ்ச்சி நிரல்; குழந்தைகளின் பொதுவான பிரச்சனைகள்-பள்ளி இடைநிற்றல், பள்ளி செல்ல மறுப்பு, தெருவோர குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர், குழந்தை துஷ்பிரயோகம், குழந்தை கடத்தல், குழந்தை விபச்சாரம், குழந்தை திருமணம், பதின்ம வயது கர்ப்பம், குழந்தைகள் இணைய கேளிக்கை விளையாட்டுகளுக்கு அடிமையாதல், சமூக ஊடகங்கள் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள், ஊனமுற்ற குழந்தைகள், பெண் குழந்தைகள்; குழந்தைகளுக்கான சேவைகள், முறைமைகள், குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம்/ மாநில ஆணையம், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு; குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் - பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், இளம் சிறார் நீதி சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டம்-2000; அணுகுமுறைகள்: தத்தெடுப்பு - உபகாரிகள் மற்றும் வளர்ப்பு பராமரிப்பு, நிறுவன பராமரிப்பு; குடும்பம் மற்றும் குழந்தை அமைப்பில் சமூகப் பணி முறைகளின் பயன்பாடு.

**அலகு X: தொழில்துறை தொடர்புகள், தொழிலாளர் நலன் மற்றும் சமூகப் பணியில் நிபுணத்துவம் (20 வினாக்கள்)**

**தொழில்துறை தொடர்புகள்**: கருத்து, பண்புகள், ஆலை மற்றும் கடை நிலை தொழில் தளங்களில் தொழில்துறை தொடர்புகள், தொழில் துறை முரண்கள்: தொழில்துறை அமைதி - கருத்துக்கள்: தொழில்துறை முரண்களுக்கான காரணங்கள் மற்றும் விளைவுகள், ஆலை மூடுதல் மற்றும் வேலை நிறுத்தங்கள், முரண்களுக்கான தீர்வுகள், மத்தியஸ்தம், சமரசம்: நடுவர் மன்றம் மற்றும் தீர்ப்பு, சச்சரவுகளைத் தடுப்பதற்கும் தீர்வு காண்பதற்கும் சட்டரீதியான மற்றும் சட்டப்பூர்வமற்ற முறைமைகள். தொழிற்சங்கங்கள்: இந்தியாவில் தொழிற்சங்கவாதம், தொழில்துறை தொடர்புகளில் பங்கு.

**தொழிலாளர் நலன்**: கருத்து, வரையறை, தத்துவங்கள், தேவை, குறிக்கோள்கள் கொள்கைகள், வரையெல்லை மற்றும் தொழிலாளர் நலன் வரம்புகள்: இந்தியாவில் தொழிலாளர் நலனின் வரலாற்று வளர்ச்சி. சட்டரீதியான மற்றும் சட்டப்பூர்வமற்ற நலன்புரி ஏற்பாடுகள்: தொழில்துறை ஆலோசனை- ஓய்வுக்கு முன், பணி வாழ்க்கையின் தரம். சமூக பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள்; தர நிர்ணயம், ஊதியக் கொள்கை, ஊதிய ஊக்கத்தொகை, போனஸ் மற்றும் இலாபப் பகிர்வு. கூட்டுபேரம்: பொருள், இலக்கு, கட்டங்கள், முன்-தேவைகள், கொள்கைகள், உத்திகள் மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள், கூட்டு பேரம் மற்றும் அதன் மீது தாக்கம் வருவிக்கும் காரணிகள் தொழில்துறை அமைப்பில் சமூகப் பணியாளரின் பங்கு.

**மனிதவள அமைப்பு - கருத்து, மற்றும் செயல்பாடுகள்**: மனிதவள மேலாண்மை, மனிதவள மேம்பாடு மற்றும் மனித வளம்; பரிணாமம், ஆசியாவில் இவற்றின் வளர்ச்சி மற்றும் போக்குகள்; மனிதவள அமைப்பு மற்றும் துணை அமைப்புகள்; கூறுகள், இலக்குகள், தொழில்துறையில் மனிதவள மேம்பாட்டுக்கான முக்கியத்துவம்; முழுமையான பின்னூட்டம்; தலைமை மற்றும் தலைமைத்துவ வளர்ச்சி; வழிகாட்டிகள் மற்றும் முன்னுதாரணங்கள் ; நிறுவன அர்ப்பணிப்பு, மனித வளம் மற்றும் பெருநிறுவன சமூக பொறுப்பு .

நாள்: 25.04.2022